**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்**

**( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான**

**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001.**

தேதி: 06.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **107/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-5 |
| சாட்சியின் பெயர் | : | தவமணி |
| கணவர் பெயர் | : | முருகானந்தம் |
| கிராமம் | : | கீழமாங்குடி |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| வயது | : | 48 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி வேறு வழக்கில் சிறையுள்ளார். P.T வாரண்ட் மூலம் காணொலி காட்சி வாயிலாக ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் நன்னிலம் வட்டம், கீழமாங்குடியில் வசித்து வருகிறேன். அ.சா-4 சுமதி எனக்கு அக்கா முறையாகும். அ.சா-4 சுமதியின் கணவரும், எனது

கணவரும் உடன் பிறந்த அண்ணன் தம்பி ஆவார்கள். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனது வீடும் அ.சா-4 சுமதி வீடும் அடுத்து அடுத்து உள்ளது. கடந்த 19.01.2011 ஆம் தேதி மாலை 7.30 மணியளவில் எனது வீட்டில் உள்ள சமையல் அறையில் நான் சமைத்துக் கொண்டிருந்தபோது அப்போது 2 வயதிருந்த எனது மகன் சந்தோஷ் அ.சா-4 ன் வீட்டிற்கு சென்றிருந்தான். மாலை 7.30 மணியளவில் எனது வீட்டிற்கு அருகாமையில் இருந்த அ.சா-4 ன் வீட்டிலிருந்து சத்தம் வந்தது. அப்போது என்னவென்று பார்க்க வெளியே வந்தேன். அ.சா-4 ம் எனது மாமியாரான லெட்சுமியும், எனது மகனை தூக்கிக்கொண்டு வீட்டின் பின்புறமாக வெளியே வந்தார்கள். நான் என்ன என்று கேட்டேன். தொடர்ந்து சத்தமாக இருந்ததால் நாங்கள் அங்கிருந்து சென்றுவிட்டோம். பின்னர் ஊர்காரர்களுடன் வந்து எங்கள் வீட்டிற்கு வந்தோம். அப்போது அ.சா-4 வீட்டில் ஒருவரை யாரோ வெட்டிப்போட்டு விட்டதாக சொன்னார்கள். நாங்கள் பயந்துகொண்டு வீட்டிற்குள் போகவில்லை. தெருவில் உள்ள எனது உறவினர் வீட்டில் சென்று தங்கிக்கொண்டோம். மறுநாள் போலீசார் வந்து விசாரித்தார்கள். நான் அவர்களிடம் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களை தான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.06 18:28:26 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.